கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவராக விளங்கும் தாங்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு தலைவர்களும், மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும், என்பால் காட்டிய அன்பையும் பரிவையும் நான் நன்கு உணர்வேன்.

என்னுடைய குறைகளைப் பொருட்படுத்தாது, என்னுடைய தகுதிகளைச் சிறப்பித்துப் பேரவையில் என்னைப் பாராட்டியதற்காகக் கடமைப்பட்டவனாவேன். அவற்றைப் பெருமையோடும் பூரிப்போடும் விலைமதிப்பில்லா செல்வமாகவும் நான் ஏற்றுப் போற்றிப் பாதுகாத்து வருவேன். பேரவைத் தலைவராகிய தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், ஏனைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

11–35 மணி

5. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)

(அ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.